கிணற்றில்தான் குடிதண்ணீர் எடுக்கிறார்கள். அதனுடைய கரைப்பகுதியிலே ஆக்கிரமிப்புக் கடைகள், அதாவது டீக்கடைகள் போன்ற கடைகளை வைத்து அந்தக் கழிவு நீர் உள்ளே போகிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஒரு பேரபட் வால்-ஐ கட்டி, நிலைமையை சரிசெய்து, ரோட்டிலுள்ள தண்ணீர் உள்ளே போகாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்த டி.குண்ணத்தூர் கிராமம் பேருந்துகள் நிற்கும் இடத்திலுள்ள ஊருணியில் கடைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் குடிசை வீடுகளின் கழிவுநீர் எதுவும் வந்து விழவில்லை என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, இந்தக் கடைகள் பல ஆண்டுக் காலமாக அங்கே இருக்கின்ற காரணத்தாலும், குடிசைகளும் அங்கே பல ஆண்டுக்காலமாக இருந்து வருகின்ற காரணத்தாலும், உள்ளாட்சித் துறையிலிருந்து ஏற்கனவே அந்தக் கடைகளுக்கும் அங்கேயுள்ள குடிசையில் இருப்பவர்களுக்கும், டின்களிலே கழிவுநீரை வைத்து, கழிவு நீர் வெளியே செல்லாத அளவிற்கு, ஊருணியைப் பாதுகாக்க வேண்டுமென்றும், கழிவுப் பொருள்களை டின்களிலே வைத்துக்கொண்டு அப்புறப்படுத்த வேண்டுமென்றும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த ஊருணியில் அப்படி கழிவுநீர் கலக்கும் என்று கருதினால், ஆய்வு செய்து அப்படி இருக்குமாயின், அந்தக் கடைகளை அப்புறப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு.பி.ஆர்.எஸ். வெங்கடேசன், திரு.எ.தெய்வநாயகம், இருவரும் இருக்கையில் இல்லை.

வினா எண் 78, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

78—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அம்மாப்பேட்டை ஒன்றிய மீனவர்களுக்குக் கடன் வழங்குதல்

****21100—திரு. வே. பெரியசாமி :***

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியம், அம்மா பேட்டையிலும், நெருஞ்சிப்பேட்டையிலும், சின்னப் பள்ளத்திலும், ..ந்தியூரிலும், கீழ்வாணியிலும் வசிக்கும் மீனவர்கள் வலை, படகு வாங்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

1994 மார்ச் 22]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். அம்மாப்பேட்டை, அந்தியூர், கீழ்வாணி மீனவர் கூட்டுறவுச் சங்க தனி அலுவலரிடமிருந்து கோரிக்கைகள் ஏதும் பெறப்பட்டால் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட அலுவலரை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை ஒன்றியம், அம்மாப்பேட்டையிலும், நெருஞ்சிப்பேட்டையிலும், அதற்கு அருகாமையிலுள்ள அந்தியூரிலும், கீழ்வாணியிலும் அதிகமாக மீனவர்கள் இருக்கின்றார்கள். இந்த மீனவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக ஐ.ஆர்.டி.பி. கடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக கடன் கொடுத்து, அதன்வாயிலாக மீனவர்கள் நல்வாழ்வு வாழ, படகு வாங்க, வலை வாங்க, அவர்கள் அந்தக் துறையினுடைய இடங்களுக்கே போகாமல், அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு தங்கள் துறையின் மூலமாக ஆவன செய்யப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் தெரிவித்திருந்த பதிலில் அந்தச் சங்கத்தினுடைய தனி அலுவலர் அவர்கள்தான் தீர்மானம் நிறைவேற்றித் தரவேண்டும். அப்படி அவர்கள் அந்தத் தீர்மானம் நிறைவேற்றி வருகின்ற பட்சத்தில் நிச்சயமாக இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல்,. அவருக்கு இன்னொரு யோசனையையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தொழிலில் சிறந்து விளங்க வேண்டும்; பொருளாதார ரீதியாக அவர்கள் முன்னுக்கு வர வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு மிக மிகக் குறைந்த வட்டியிலே 100 ரூபாய்க்கு 60 காசு என்ற வட்டி வீதத்திலே இன்றைக்குக் கடனுதவி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்புட்டிருக்கிறது. அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரை அணுகி அதற்கான விண்ணப்பங்களைப் பெற்று அனுப்புவார்கள் எனில் அந்த மனுக்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் சிறப்புமிகு மாட்சிமை பொருந்திய நல்லாட்சியை செம்மையாய் நிறுவி, பிறருக்கு அஞ்சியும் வாழ மாட்டேன், பின் எவரையும் கெஞ்சியும் ஆள மாட்டேன் என நெஞ்சுரத்துடனும், நேர்மைத் திறத்துடனும்

செயலாற்றி, சொன்னதைச் செய்தும், செய்யப் போவதை மட்டும் சொல்லியும், சொல்லாமலேயே பல திட்டங்களைச் செய்தும், வறியவர்களின் வாட்டம் போக்கி, ஏழை என்றும், அடிமை என்றும் எவனும் இல்லை ஜாதியில், இழிவு கொண்ட மனிதன் என்பது இந்தியாவில் இல்லையே என்பதை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் எங்களது தாய் உள்ளம் கொண்ட தெய்வத்தாய் புரட்சித் தலைவியின் ஆட்சியில் பல்வேறு வகையான முற்போக்கான திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றுகின்ற இந்த நேரத்தில், மீனவர்களுக்கும் ஏராளமாக திட்டங்களைச் செய்வதாக நானும் அறிவேன். அதை அமைச்சரவர்களும் சொன்னார்கள். ஆயினும், இந்தத் துறையின் மூலமாக ஏழை மீனவர்களுக்கு வலை மற்றும் படகுகள் வாங்குவதற்குத் திட்டங்கள் பல இருந்தும், அவைகளை விரைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், பல விண்ணப்பங்களையும் காலதாமதப்படுத்துவதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்களா? அதை உடனே விரைந்து செய்வதற்கு இந்த அரசு அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவு வழங்குவார்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அம்மாப்பேட்டை, அந்தியூர், கீழ்வாணி இந்த மீனவர் கூட்டுறவுச் சங்க தனி அலுவலரிடத்திலிருந்து இதுவரையிலே கோரிக்கைகள் வரப்பெறவில்லை. வரப்பெறும் பட்சத்திலே நிச்சயமாக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 79, திரு.கே.ஏ.மனோகரன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

79—

சூளகிரியில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

***23196**—திரு. கே. ஏ. மனோகரன்:*

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூளகிரியில் உள்ள பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் சூளகிரியில் தனியார் கட்டிடத்தில் இயங்கும் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.